பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**12 02 2026 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தி, சுயசார்பு இந்தியா என்ற இலக்கை நோக்கி முன்னேறி வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

2. தொழிலக உறவுகளுக்கான விதிகள் திருத்த மசோதா இன்று நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

3. கல்வித்துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

4. பங்களாதேஷில் இன்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் பதிவான வாக்குகள் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன.

5. உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் நமீபியாவுக்கு எதிராக இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தி, சுயசார்பு இந்தியா என்ற இலக்கை நோக்கி முன்னேறி வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்துக்கு பதிலளித்து பேசிய அவர், பணவீக்க விகிதத்தை கட்டுப்படுத்தி, பொருளாதார வளர்ச்சியை நிலைநாட்டியுள்ளதாக கூறினார்.

நடப்பு நிதியாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி ஏழு புள்ளி நான்கு சதவீதமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு உற்பத்தித்துறையை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக கூறிய அவர், இத்துறையின் வளர்ச்சிக்காக பட்ஜெட்டில் வழிவகை செய்துள்ளதாக தெரிவித்தார்.

பல்வேறு நலத்திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டை அமைச்சர் மறுத்துள்ளார்.

மத்திய அரசு மேற்கொண்டுள்ள பொருளாதார சீர்திருத்தம் மூலம், நாடு வளர்ச்சியடைந்த வருவதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தொழிலக உறவுகளுக்கான விதிகள் திருத்த மசோதா இன்று நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

இம்மசோதா மீதான விவாதத்துக்கு பதிலளித்து பேசிய மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, தேசிய அளவிலான 17 தொழிற்சங்கங்கள் இம்மசோதாவை வரவேற்றுள்ளதாக தெரிவித்தார்.

தொழிலாளர்கள் நலனுக்காக இந்த திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அந்த சங்கங்கள் கூறியுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒரு சில தொழிற்சங்கங்கள் மட்டும் இதனை எதிர்த்துள்ளதாக கூறிய அவர், தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு குறைவாக எந்தவொரு மாநிலத்திலும் ஊதியம் நிர்ணயிக்க இயலாது என்றும் தெரிவித்தார்.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம ஊதியம் வழங்குவதை இந்த சட்டத் திருத்தம் உறுதி செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த நேரத்தில் தொழிலாளர்களுக்கு ஊதியம் கிடைப்பதற்கும் இது வழிவகுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

**40** வயதுக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளவும் புதிய திருத்தம் வகை செய்வதாகவும் அவர் கூறினார்.

மூன்றாவது மற்றும் நான்கு அடுக்கு நகரங்களில் புதிய வேலைவாய்ப்புகள் இந்த சட்டத்தின்மூலம் உருவாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த **11** ஆண்டுகளில் தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு கணிசமான அளவில் விரிவடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

கல்வித்துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான மாநாட்டில் உரையாற்றிய அவர், நமது பள்ளிகளில் மூன்றாம் வகுப்பில் இருந்து, செயற்கை நுண்ணறிவு பாடம் இணைக்கப்பட உள்ளதாக கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையில் செயற்கை நுண்ணறிவு பிரிவில் இந்தியாவை முன்னணி நாடாக மாற்ற நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் உலக பொருளாதாரத்தில் செயற்கை நுண்ணறிவு 15 ட்ரில்லியன் டாலர் அளவுக்கு அதிகரிக்கக் கூடும் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் ஒவ்வொரு மாணவரும் செயற்கை நுண்ணறிவு பாடம் கற்க வேண்டியதன் அவசியத்தை திரு தர்மேந்திர பிரதான் வலியுறுத்தினார்.

<<<<<>>>>>

அரசு மற்றும் தனியார் துறைகளில் புதுமை கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவித்தால் மட்டுமே தொழில்நுட்பத்தில் நாடு வளர்ச்சியடைய முடியும் என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் புத்தாக்க தொழில்நுட்பம் தொடர்பான நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், பல்வேறு வளர்ச்யடைந்த நாடுகளுடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

நமது நாட்டின் புத்தாக்கம் மற்றும் புத்தொழில் வளர்ச்சியடைந்து வருவது மகிழ்ச்சி அளிப்பதாக அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி, நாடு முன்னேறி வருவதாக திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<>>>>>

இந்தியா — அமெரிக்கா இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் பரஸ்பரம் புரிந்துணர்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஒப்பந்தம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில், இது தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கும் இடைக்கால ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்குமான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்க தரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் இரு நாடுகளுக்கும் இடையே இந்த வர்த்தக ஒப்பந்தத்தில் உள்ள புரிதலை வெளிப்படுத்தி உள்ளதாகவும் அவர் கூறினார்.

பங்களாதேஷ் பொதுத் தேர்தல் பற்றி குறிப்பிட்ட அவர், அந்நாட்டில் தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும், நம்பகத்தன்மையுடனும் நடைபெற வேண்டும் என்பதையே இந்தியா விரும்புவதாக கூறினார்.

புதுதில்லியில் இம்மாதம் நடைபெறவுள்ள இந்தியா செயற்கை நுண்ணறிவு தாக்கம் தொடர்பான உச்சிமாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் அழைப்பின்பேரில் பிரேசில் அதிபர் திரு **Luiz Inacio** கலந்து கொள்ள இருப்பதாகவும், வரும் **18**-ஆம் தேதி அவர் புதுதில்லி வரவுள்ளதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்தார்.

<<<<<>>>>>

இந்தியா — அமெரிக்கா இடையிலான இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் நாட்டின் பொறியியல் ஏற்றுமதியை குறுகிய காலத்தில் மேம்படுத்தும் என்று பொறியியல் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுமத்தின் முன்னாள் தலைவர் திரு அருண்குமார் கரோடியா தெரிவித்துள்ளார்.

எமது செய்திப்பிரிவுக்கு அவர் அளித்த பேட்டியில், பிரிவு **232**-ன்கீழ் உள்ள பொருட்களுக்கான வரியை மாற்றியமைப்பது குறித்தும் இரு நாடுகளும் விரைந்து முடிவெடுக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<>>>>>

கேலோ இந்தியா திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் இதுவரை **628** கோடியே **91** லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்துள்ள அவர், **3** ஆயிரத்து **158** கோடி ரூபாய் செலவில், **344** புதிய விளையாட்டு உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ், **322** பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் வருடந்தோறும் ஆறு லட்சத்து **28** ஆயிரத்து **400** ரூபாய் செலவில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

<<<<<>>>>>

உணவு பதப்படுத்துதல் துறை தொழில்நுட்பத்தின் மேம்பாட்டுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு **Ravneet Singh** தெரிவித்துள்ளார்.

மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்த அவர், தஞ்சாவூர், தேசிய உணவுப் பதப்படுத்துதல் தொழில்

கல்விக்கழகத்தில் 55 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

மேலும், பழங்கள் மற்றும் காய்கறிகளை பாதுகாப்பாக கொண்டு செல்வதற்கான 53 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு **Ravneet Singh** தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

புதுச்சேரியில் வரும் நிதியாண்டின் முதல் ஐந்து மாதங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு மசோதாவுக்கு புதுச்சேரி சட்டப்பேரவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் பெறப்பட்டது.

முதலமைச்சர் திரு என். ரங்கசாமி இம்மசோதாவை தாக்கல் செய்தார்.

நடப்பு நிதியாண்டில் கூடுதல் செலவினங்களுக்கு இம்மசோதாவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கீட்டு மசோதா நிறைவேற்றப்பட்டபின் புதுச்சேரி சட்டப்பேரவை மறு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<>>>>

பங்களாதேஷில் இன்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் பதிவான வாக்குகள் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன.

காலை ஏழரை மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை நான்கரை மணிவரை நடைபெற்றது.

பங்களாதேஷில் **299** தொகுதிகளில் ஆயிரத்து தொள்ளாயிரத்து **81** வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

ஒரு சில சம்பவங்களை தவிர வாக்குப்பதிவு பொதுவாக அமைதியாக நடைபெற்றதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

நேபாளத்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்காக மூன்றாம் கட்ட உதவியை இந்தியா அளித்துள்ளது.

நேபாளத்துக்கான இந்திய தூதர் திரு நவீன் ஸ்ரீவத்சவா, தேர்தல் பணிகளுக்காக **270** வாகனங்களை நேபாளத்துக்கு இன்று வழங்கினார்.

காட்மாண்டுவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நேபாள உள்துறை அமைச்சர் திரு ஓம். பிரகாஷ் இதனை பெற்றுக்கொண்டார்.

இதில், நேபாள ராணுவத்திற்கான **50** ட்ரக்குகளும் அடங்கியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<<>>>>>

உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் நமீபியாவுக்கு எதிராக இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.

தில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற நமீபியா இந்தியாவை பேட் செய்ய பணித்தது.

இந்தியா சற்றுமுன்வரை 2 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 25 ரன் எடுத்துள்ளது.

---------------

பிரான்சில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி — ஆஸ்திரியாவின் Neil Overleitner இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---------------

சென்னை சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் நிக்கி கலியாண்டா —தாய்லாந்தின் Pruchya Isaro இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--------------

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 6-1 என்ற செட் கணக்கில், இந்தியாவின் பத்ரிநாத் — அபினவ் சஞ்ஜீவ் இணையை வென்றது.

-----------

சென்னையில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Snehit, Ayhika Mukherjee** ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<END>>>>>**